©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No.TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 8.00 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 181A] சென்னை, செவ்வாய்க்கிழமை, ஜூலை 21, 2009
ஆடி 5, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

| சட்டமுன்வடிவுகள் : | பக்கங்கள் |
|---|---|
| எண் 34/2009—தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டம் | 2–11 |
| எண் 35/2009—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டம் .. .. | 13–19 |

2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.:—

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/2009**

<u>தமிழ்நாடு மாநிலத்தில் ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.</u>

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்

பொருள் வரையறைகள்.

2.(1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

a) "ஆட்சியர்" என்றால், ஒரு மாவட்ட ஆட்சியர் என்று பொருள்படும்; மற்றும் இந்தச் சட்டத்தின்படி ஆட்சியரின் அலுவற்பணிகளைப் புரிவதற்காக, அரசினால் தனிமுறையில் அமர்த்தப்படும் அலுவலர் எவரையும் உள்ளடக்கும்;

b) "அரசு" என்றால், மாநில அரசு என்று பொருள்படும்;

c) ''ஜல்லிக்கட்டு'' என்பது, ''மஞ்சுவிரட்டு'', ''ஊர்மாடு'', ''வடமாடு'', ''எருது விடும் விழா'' ஆகியவற்றையும் ஏறுதழுவுதலை உள்ளடக்கிய அனைத்து நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கும்.

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை முறைப்படுத்துதல்.

3. (1) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதிலும் அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்பு அல்லது தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், ஆட்சியரின் எழுத்து வடிவிலான முன் அனுமதியின்றி நபர் எவரும், (இதன்பின்பு இந்தச் சட்டத்தில் ''அந்த நிகழ்ச்சி'' என குறிப்பிடுவதான) ''ஜல்லிக்கட்டினை'' நடத்துதல் ஆகாது.

(2) மாவட்ட ஆட்சியர் பின்வருமாறு தாமே மனநிறைவடைந்தாலன்றி, (1) ஆம் உட்பிரிவின்படியான அனுமதி எதுவும், அந்த நிகழ்ச்சியை நடத்தும் நபர் எவருக்கும் வழங்கப்படுதல் கூடாது.

(i) ஜனவரி முதல் மே வரையிலான மாதங்களின்போது நடத்தப்படுகிறது என்பது குறித்து

(ii) தேர்வு செய்யப்பட்ட இடம், முறையாக அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு பொருத்தமானது;

(iii) தொடர்ந்து கடந்த ஐந்தாண்டுகளின்போது அந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது.

(iv) அந்த நிகழ்ச்சி மாவட்ட அரசிதழில் மாவட்ட ஆட்சியாளரால் அறிவிக்கை செய்யப்படுகிற ஓரிடத்தில் நடத்தப்படுதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட அனுமதியானது–

a) அதில் குறித்துரைக்கப்படும் அத்தகைய பகுதிகளுக்கும் குறித்துரைக்கப்படும் அத்தகைய கால அளவுக்கும் அத்தகைய நோக்கங்களுக்கும் செல்லத்தக்கதாகும்.

b) அதில் குறித்துரைக்கப்படும் அத்தகைய நிபந்தனைகளுக்கும், அத்தகைய கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாயிருக்கும்.

(4) (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட அனுமதியானது, அந்த நிகழ்ச்சி நிகழ்வதற்கு முன்பு, அந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்கின்ற நபருக்கு, அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினைக் கொடுத்த பின்பு, எந்த நேரத்திலும் மாவட்ட ஆட்சியரால் திரும்பப் பெறப்படலாம் அல்லது மாற்றியமைக்கப்படலாம் :

<u>வரம்புரை</u>

ஆனால் எழுதிப் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, உடனடி நடவடிக்கை தேவை என ஆட்சியர் நிறைவுறக்காண்பாராயின், அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிற நபருக்கு அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றை கொடுக்காமலேயே மாவட்ட ஆட்சியர் அந்த அனுமதியை திரும்பப் பெறலாம் அல்லது மாற்றி அமைக்கலாம்.

அமைப்பாளர்களின் பொறுப்பு.

4. அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிற நபர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்:–

(i) அந்த நிகழ்ச்சியை முறையாக நடத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்தல் வேண்டும்:

(ii) அந்த நிகழ்ச்சியின் தேதிக்கு முப்பது நாட்களுக்கு முன்பு, அந்தந்த மாவட்டத்தின் ஆட்சியருக்கு எழுத்து வடிவில் இது குறித்து தெரிவித்து அவர்தம் அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

(iii) அரங்கத்தில் அல்லது காளை மாடுகள் கடந்து செல்கிற வழியில் இரட்டைத் தடுப்பானது அமையும் வகையில், அந்த தடுப்புகளுக்குள் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பார்வையாளர்கள் மற்றும் அருகில் இருப்பவர்களுக்கு ஊறு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு இரட்டைத் தடுப்பினை அமைத்தல் வேண்டும்;

(iv) பார்வையாளர் மாடத்தை, பார்வையாளர்கள் வசதியாக அமர்ந்து நிகழ்ச்சியை காணக்கூடிய முறையில் நிறுவுதல் வேண்டும்; மற்றும் அந்தப் பார்வையாளர் மாடமானது அவர்களைத் தாங்கும் வகையில் உறுதியான கட்டைகளால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(v) இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு தமது காளை மாடுகளை கொண்டுவர விரும்புகிற நபர்களுக்கு, ஆட்சியரின் முன் அனுமதி பெறுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்;

(vi) காளைகள், கால்நடை பராமரிப்புத் துறையின் அதிகார அமைப்புகளால் தக்க பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்; எந்த வடிவத்திலும் காளைகளுக்கு மிகுதியான செயல்பாட்டினை செய்யும் வகையில் மருந்துகள் கொடுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்; மற்றும் இதற்கென வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வடிவத்திலும், அத்தகைய முறையிலும் சான்றிதழ் ஒன்றை பெறுதல் வேண்டும்;

(vii) இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னதாகவே இந்த நிகழ்ச்சியில் ஏறுதழுவுகிறவர்களின் பெயர்களையும், பிற விவரங்களையும் ஆட்சியரிடம் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்; ஏறுதழுவுபவர்களும், இந்த நோக்கத்திற்கென ஆட்சியரால் அமைத்துருவாக்கப்பட்ட மருத்துவக்குழு ஒன்றினால் முழுமையான மருத்துவச்சோதனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்;

(viii) ஏறுதழுவுபவர்கள் ஒவ்வொருவரும், ஆட்சியரால் வழங்கப்பட்ட தேவையான அடையாள அட்டைகளுடன் கூடிய தனித்து அடையாளம் தெரிவதற்கான தனிப்பட்ட உடை ஒன்றை அணிவதை உறுதி செய்தல் வேண்டும்;

(ix) அந்த நிகழ்ச்சியின்போது விபத்து அல்லது காயம் ஏற்படும் நேர்வில், பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்டவரின் நலனுக்காக, ஆட்சியரால் தீர்மானிக்கப்படக்கூடியதான இரண்டு இலட்சம் ரூபாய்க்கு குறையாத தொகை ஒன்றை ஆட்சியரிடம் வைப்பீடு செய்தல் வேண்டும்:

<u>வரம்புரை :</u>

ஆனால், இந்தக்கூறிலுள்ள எதுவும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் நடப்பதில் அதிகார அமைப்புகளின் பங்கில் குறைபாடு உள்ளது என்பது நிலைநாட்டப்பட்டாலன்றி அந்த நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தின்போது ஏற்பட்ட காயம் அல்லது இழப்புக்கான சரியீட்டைச் செலுத்துவதற்கு அரசையோ அல்லது அதன் அதிகார அமைப்புகள் ஏதொன்றையுமோ கடமைப் பட்டதாக்குவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது; மற்றும்

வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொறுப்புகள் எதனையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

5. மாவட்ட ஆட்சியர்,

மாவட்ட ஆட்சித் தலைவரால் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள்.

(i) செயற்களத்தில் இரட்டைத்தடுப்பினை செய்து, காளை மாடுகள் அந்த இரட்டைத் தடுப்பினை தாண்டாத வகையில் குறைந்தது ஆறு அடி உயரத்திற்கு அந்த இரட்டைத் தடுப்பினை உறுதிசெய்து நிகழ்ச்சியினை காண வரும் பார்வையாளர்களுக்கு ஊறுகள் ஏற்படுவதை தவிர்த்தல் வேண்டும்;

(ii) காட்சிக் கூடத்தில் உள்ள பார்வையாளர்களின் எண்ணிக்கையானது பொதுப்பணித்துறையினால் வகுத்துரைக்கப்பட்ட வரம்பிற்கு மேற்படாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

(iii) இரட்டைத் தடுப்பிற்காகவும் வழியடைப்பிற்காகவும் காட்சி கூடத்தின் பாதுகாப்பிற்காகவும் பொதுப்பணித் துறையிடமிருந்து பாதுகாப்புச் சான்றிதழ் பெற்றிருப்பதை உறுதி செய்திட வேண்டும்;

(iv) அக்காளைகள் எந்தவித நோய்களும் இல்லாமலும் அவற்றை மிகவும் வலியதாக்கும் தன்மையுடைதாகவும் முரட்டுத் தனமாக்கும் நோக்கத்துடன் புகையிலை நச்சு, கொக்கைன் போன்ற எந்தப் பொருளையும் கொடுத்து வெறியூட்டாமல் அல்லது மருந்து ஊட்டாமல் இருப்பதை கால்நடை பராமரிப்புத்துறையின் உதவியுடன் உறுதி செய்தல் வேண்டும்.

(v) நிகழ்ச்சி நடக்கும் இடங்களில் போதிய அளவிற்கு காவல்துறையின் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(vi) நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் நோயாளர் ஊர்தி உள்ளடங்கலான தேவையான மருத்துவ வசதிகள் வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்; மற்றும் அந்நோக்கத்திற்கென மருத்துவக் குழு ஒன்றை அமைத்தல் வேண்டும்.

(vii) நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் தேவையான குடிநீர் வழங்கப்படுவதற்கும், துப்பரவு வசதிகளுக்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்;

(viii) அந்த நிகழ்ச்சியின் ஒவ்வொரு இனத்தையும் கவனிப்பதற்கும், காளைகளைச் சோதனை செய்தல், ஏறு தழுவுபவர்களை சோதனை செய்தல், தடுப்பு ஏற்பாடுகளையும் பார்வையாளர் மாட அமைப்பு ஏற்பாடுகளையும் சரி பார்த்தல், மருத்துவ வசதிகள், குடிநீர் வழங்கல், துப்பரவு ஏற்பாடுகள், பார்வையாளர்களின் பாதுகாப்பு இவற்றோடு, இந்நிகழ்ச்சி தொடர்பான பிற ஏதேனும் தேவைப்பாடுகளையும் கவனித்துச் செயல்பட துணை ஆட்சியர் படிநிலைக்கு குறையாத அலுவலர் ஒருவருக்கு அதிகாரமளித்தல் வேண்டும்;

மையச்சட்டம், 59/1960.

(ix) 1960-ஆம் ஆண்டு விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தின் மற்றும் அதன்படி உருவாக்கப்பட்ட விதிகளின் வகைமுறைகள் குறித்தும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் உள்ள இடையூறுகள் குறித்தும் பெருமளவிலான விளம்பரம் செய்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்;

மையச்சட்டம், 59/1960.

(x) அந்த நிகழ்ச்சி நடைபெறும் போது 1960–ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டத்தின்படி அமைத்து உருவாக்கப்பட்ட கால்நடை நலவாரியத்தைச் சார்பாற்றம் செய்கிற கால்நடை நல ஆர்வலர்கள் அங்கிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்;

(xi) அந்த நிகழ்ச்சி முழுவதையும் காணொலிப்படமாக எடுத்தல் வேண்டும்; மற்றும் தேவைப்படும் போதெல்லாம் அரசுக்கோ அல்லது பிற அதிகார அமைப்பிற்கோ அதனை வழங்குதல் வேண்டும்; மற்றும்

(xii) வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தல் வேண்டும்.

6. (i) 3–ஆம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின்படி அனுமதி கொடுப்பதற்கு ஆட்சியர் மறுக்கிறவிடத்து அவ்வாறு மறுக்கிற ஆணையினால் குறையுற்ற நபர் எவரும், அத்தகைய ஆணை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்கள் கால அளவு ஒன்றுக்குள் அரசிடம் மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்யலாம். மேல்முறையீடு.

<u>வரம்புரை</u>

ஆனால், அரசானது, மேல்முறையீட்டாளர், பதினைந்து நாட்கள் கால அளவுக்குள் மேல்முறையீடு ஒன்றைத் கொடுக்காததற்குப் போதிய காரணம் கொண்டிருந்தார் என்று மனநிறைவடையுமாயின், மேற்சொன்ன பதினைந்து நாட்கள் கால அளவு கழிவுற்ற பின்பு மேல்முறையீடு ஒன்றை ஏற்கலாம்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீட்டைப் பெற்றுக் கொண்டதன் பேரில், அரசானது, நிகழ்வினை ஆராய்ந்த பின்பும் மேல்முறையீட்டாளருக்கு அவர்தம் தரப்பை எடுத்து உரைப்பதற்கான வாய்ப்பு ஒன்றை நல்கிய பின்பும் தான் பொருத்தமெனக் கருதும் அத்தகைய ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்.

<u>தண்டனை.</u>

7. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மீறுகிற எவரொருவரும், குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டத்தின் பேரில் ஓராண்டு வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை விதித்து அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்ககூடிய பணத் தண்டனை விதித்து அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

<u>நல்ல எண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைப் பாதுகாப்பு.</u>

8. இந்தச் சட்டத்தினை ஒட்டி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதியை அல்லது ஆணையை ஒட்டி நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும் நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

<u>இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.</u>

9. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல் படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதனவாயிராத இந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ உகந்தவையென்றோ தனக்குத் தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்.

<u>பிறசட்டங்களில் செயல்பாடு பாதிக்கப்படுதல் கூடாது எனல்.</u>

10. இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயென்றே அதனை குறைவு படுத்துதல் கூடாது.

<u>விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.</u>

11. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எதனையுமோ நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

2 (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்டதொரு நாளன்று நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி,

அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளன்று நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

3. இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை, அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடர் அல்லது அதனை அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர், அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதலாகாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின், அதன் பின்பு, அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணை அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்வுக்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லும் தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

## நோக்க — காரண விளக்கவுரை

"ஜல்லிக்கட்டு'' என்பது, "மஞ்சு விரட்டு'', ''ஊர்மாடு'' "வடமாடு'', அல்லது "எருது விடும் விழா'' போன்றவற்றை உள்ளடக்கும். மேற்சொன்ன விழா, தமிழர்களின் பண்டைய பண்பாடு மற்றும் மரபின் ஒரு பகுதியாக ஏறு தழுவுதலை உள்ளடக்கியதாயிருக்கிறது. மேற்சொன்ன மரபின்படியான இந்த வழக்கம், 400 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்துள்ளது. தற்போது, ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, ஊர்மாடு, வடமாடு, எருது விடும் விழா நடத்தப்படுவதை அல்லது ஏறுதழுவுதலை உள்ளடக்கிய அத்தகைய செயற்பாடு எதனையும் செய்வதை முறைப்படுத்துவதற்குச் சட்டம் எதுவுமில்லை. எனவே, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், அதோடுகூட விலங்குகள், பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், நெறிமுறைகளை வகுத்துரைப்பதன்மூலம் அத்தகைய நிகழ்ச்சிகளை முறைப்படுத்துவதற்கு சட்டமொன்றினைக் கொண்டு வருவதென அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

பொங்கலூர் நா. பழனிச்சாமி
ஊரகத் தொழில்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

## சட்டமியற்று அதிகார ஒப்படைப்பு பற்றிய குறிப்பு

இச்சட்ட முன்வடிவின் 1 (2), 4,5,9,11 ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அறிவிக்கைகளை அல்லது ஆணைகளை பிறப்பிப்பதற்கோ அல்லது நேர்விற்கேற்ப விதிகளைச் செய்வதற்கோ அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 170,82,16,000 | *1,000* | 170,82,17,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 459,90,36,000 | *1,000* | 459,90,37,000 |
| | | மூலதனம் | 957,76,72,000 | ... | 957,76,72,000 |
| | | கடன் | 14,40,66,000 | ... | 14,40,66,000 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 3,112,06,18,000 | *3,000* | 3,112,06,21,000 |
| | | மூலதனம் | 35,02,000 | ... | 35,02,000 |
| | | கடன் | 900,00,00,000 | ... | 900,00,00,000 |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 1,323,35,36,000 | *1,000* | 1,323,35,37,000 |
| | | மூலதனம் | 100,00,00,000 | ... | 100,00,00,000 |

## இணைப்புப் பட்டியல்.

(2-ஆம் பிரிவைக் காண்க.)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 1 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 28,84,52,000 | *30,29,000* | 29,14,81,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 24,20,25,000 | *6,34,85,000* | 30,55,10,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 310,38,37,000 | *67,49,38,000* | 377,87,75,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 780,68,13,000 | *4,00,01,000* | 784,68,14,000 |
| | | மூலதனம் | 91,67,71,000 | ... | 91,67,71,000 |
| | | கடன் | 3,44,000 | ... | 3,44,000 |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 1,744,31,58,000 | *3,000* | 1,744,31,61,000 |
| | | மூலதனம் | 91,36,55,000 | ... | 91,36,55,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 6 | கால்நடை பராமரிப்பு ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 279,47,45,000 | *1,000* | 279,47,46,000 |
| | | மூலதனம் | 1,72,40,000 | ... | 1,72,40,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 7 | மீன்வளம் ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 107,20,32,000 | *2,10,000* | 107,22,42,000 |
| | | மூலதனம் | 32,27,86,000 | ... | 32,27,86,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 34,31,00,000 | *1,000* | 34,31,01,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 11,31,31,000 | ... | 11,31,31,000 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 406,09,49,000 | *3,000* | 406,09,52,000 |
| | | மூலதனம் | 28,65,94,000 | ... | 28,65,94,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 261,90,60,000 | *1,000* | 261,90,61,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 170,82,16,000 | *1,000* | 170,82,17,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 459,90,36,000 | *1,000* | 459,90,37,000 |
| | | மூலதனம் | 957,76,72,000 | ... | 957,76,72,000 |
| | | கடன் | 14,40,66,000 | ... | 14,40,66,000 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 3,112,06,18,000 | *3,000* | 3,112,06,21,000 |
| | | மூலதனம் | 35,02,000 | ... | 35,02,000 |
| | | கடன் | 900,00,00,000 | ... | 900,00,00,000 |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 1,323,35,36,000 | *1,000* | 1,323,35,37,000 |
| | | மூலதனம் | 100,00,00,000 | ... | 100,00,00,000 |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 15 | சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை | வருவாய் | 242,16,40,000 | *1,000* | 242,16,41,000 |
| | | மூலதனம் | 92,05,78,000 | ... | 92,05,78,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 16 | நிதித் துறை | வருவாய் | 477,67,44,000 | *1,000* | 477,67,45,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 26,07,55,000 | ... | 26,07,55,000 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 533,93,32,000 | *1,000* | 533,93,33,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 80,08,48,000 | *1,000* | 80,08,49,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 3,184,83,45,000 | *53,21,000* | 3,185,36,66,000 |
| | | மூலதனம் | 205,86,29,000 | ... | 205,86,29,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 1,429,54,55,000 | *2,000* | 1,429,54,57,000 |
| | | மூலதனம் | 33,51,07,000 | ... | 33,51,07,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 1,295,98,41,000 | *13,000* | 1,295,98,54,000 |
| | | மூலதனம் | 3,087,24,69,000 | *1,000* | 3,087,24,70,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 2,706,34,67,000 | *1,05,00,000* | 2,707,39,67,000 |
| | | மூலதனம் | 147,19,90,000 | ... | 147,19,90,000 |
| | | கடன் | 50,00,000 | ... | 50,00,000 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 163,03,15,000 | *1,00,000* | 163,04,15,000 |
| | | மூலதனம் | 2,00,01,000 | ... | 2,00,01,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 110,54,40,000 | *4,000* | 110,54,44,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 93,31,29,000 | *1,000* | 93,31,30,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 369,25,99,000 | *2,000* | 369,26,01,000 |
| | | மூலதனம் | 874,12,33,000 | ... | 874,12,33,000 |
| | | கடன் | 220,78,91,000 | ... | 220,78,91,000 |
| 27 | தொழில் துறை | வருவாய் | 256,26,33,000 | *1,000* | 256,26,34,000 |
| | | மூலதனம் | 21,20,03,000 | ... | 21,20,03,000 |
| | | கடன் | 200,00,03,000 | ... | 200,00,03,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் ( தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 42,12,64,000 | ... | 42,12,64,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 29 | சுற்றுலா— கலை மற்றும் பண்பாடு ( சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | வருவாய் | 73,88,01,000 | *7,000* | 73,88,08,000 |
| | | மூலதனம் | 24,71,57,000 | ... | 24,71,57,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு ( தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 78,14,48,000 | *10,02,000* | 78,24,50,000 |
| | | மூலதனம் | 9,000 | ... | 9,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 31 | தகவல் தொழில் நுட்பவியல் துறை | வருவாய் | 521,37,16,000 | *1,000* | 521,37,17,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | வருவாய் | 442,18,30,000 | *1,000* | 442,18,31,000 |
| | | மூலதனம் | 4,47,19,000 | ... | 4,47,19,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 33 | சட்டத் துறை | வருவாய் | 15,07,50,000 | ... | 15,07,50,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 2,767,22,26,000 | *1,000* | 2,767,22,27,000 |
| | | மூலதனம் | 1,192,00,22,000 | ... | 1,192,00,22,000 |
| | | கடன் | 265,74,09,000 | ... | 265,74,09,000 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 44,41,42,000 | *22,78,75,000* | 67,20,17,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 50,66,26,000 | ... | 50,66,26,000 |
| | | மூலதனம் | 17,92,52,000 | ... | 17,92,52,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 57,50,55,000 | *2,000* | 57,50,57,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 234,04,83,000 | *7,20,000* | 234,12,03,000 |
| | | மூலதனம் | 5,00,00,000 | ... | 5,00,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 39 | கட்டடங்கள் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 150,39,77,000 | *1,000* | 150,39,78,000 |
| | | மூலதனம் | 790,46,88,000 | ... | 790,46,88,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 40 | பாசனம் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 819,94,55,000 | *4,000* | 819,94,59,000 |
| | | மூலதனம் | 957,12,78,000 | *6,00,03,000* | 963,12,81,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 2,146,16,82,000 | *2,000* | 2,146,16,84,000 |
| | | மூலதனம் | 269,97,71,000 | ... | 269,97,71,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 4,504,92,49,000 | *1,000* | 4,504,92,50,000 |
| | | மூலதனம் | 1,160,12,53,000 | ... | 1,160,12,53,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 8,885,28,12,000 | *21,000* | 8,885,28,33,000 |
| | | மூலதனம் | 262,24,67,000 | ... | 262,24,67,000 |
| | | கடன் | 5,50,000 | ... | 5,50,000 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 97,82,89,000 | *1,000* | 97,82,90,000 |
| | | மூலதனம் | 6,000 | ... | 6,000 |
| | | கடன் | 1,000 | ... | - 1,000 |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 2,167,42,55,000 | *1,000* | 2,167,42,56,000 |
| | | மூலதனம் | 3,000 | ... | 3,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 26,28,84,000 | *6,000* | 26,28,90,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை ( தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 49,69,33,000 | *1,00,60,000* | 50,69,93,000 |
| | | மூலதனம் | 2,22,16,000 | ... | 2,22,16,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 347,99,53,000 | *2,000* | 347,99,55,000 |
| | | மூலதனம் | 125,15,77,000 | ... | 125,15,77,000 |
| | | கடன் | 125,00,00,000 | ... | 125,00,00,000 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 54,25,24,000 | *1,000* | 54,25,25,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | 2,50,00,000 | ... | 2,50,00,000 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 9,861,95,00,000 | *31,08,000* | 9,862,26,08,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு | வருவாய் | 250,01,91,000 | ... | 250,01,91,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *6,805,04,11,000* | 6,805,04,11,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | பொதுக்கடன்–திருப்பிச் செலுத்துதல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | *4,013,32,74,000* | 4,013,32,74,000 |
| | **மொத்தம்** | வருவாய் | **53,675,34,10,000** | ***6,909,08,54,000*** | **60,584,42,64,000** |
| | | மூலதனம் | **10,578,46,57,000** | ***6,00,04,000*** | **10,584,46,61,000** |
| | | கடன் | **1,766,41,57,000** | ***4,013,32,74,000*** | **5,779,74,31,000** |
| | **பெருமொத்தம்** | | **66,020,22,24,000** | ***10,928,41,32,000*** | **76,948,63,56,000** |

**நோக்க–காரண விளக்கவுரை.**

இச்சட்ட முன்வடிவானது –

(a) 2009– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மேற்சொன்ன நிதியத்தின்மீது *சாட்டப்பட்ட* செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகைகளை மாநிலத்தின் தொகு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1) –ஆம் கூறினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**க.அன்பழகன்,**
நிதி அமைச்சர்.

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.